# கற்பகம்



''நிகழ்வும் நிஜமும்''

வைகாசி - 1986

விலை: ரூபா 2-50

வைகாசி – 1986
மலர் – 7
இதழ் – 3

வெளியீடு:

வடமாகாண
தெ.ப.பொ. கூட்டுறவு
சங்கங்களின் சமாஜம்
330, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22713

அட்டைப்படம்:
கே. ஆர். வி. வாசன்

வடிவமைப்பும்
அச்சீடும்
ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ்
125A, ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம்.


# அந்நிய மோகம் வேண்டாம்!

இன்று உலக மக்கள் பல்வேறு போராட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். தென்னாபிரிக்காவில் இன விடுதலைப் போராட்டம் பாக்கிஸ்தான் பங்களாதேஷில் ஜனநாயக விடுதலைக்கான போராட்டம். லிபிய மக்களின் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டம். இங்கு, ஈழ விடுதலைப் போராட்டம். இப்படி இந்த 'விடுதலை'ப் போராட்டங்கள் நீடித்துக் கொண்டே போகின்றன. இவற்றில் பட்டினிப் போராட்டத்திலிருந்து விடுபடுவது இலகுவான ஒன்றல்ல. எதியோப்பியாவில் ஏற்பட்டுள்ள பஞ்சமும், பட்டினிச் சாவுகளும் எம்மைச் சிந்திக்க வைப்பன. பொருளாதார விடுதலை மூலமே நாம் பட்டினிப் போராட்டத்திலிருந்து விடுபட முடியும். அனைத்து மூல வளங்களையும் எம்மால் முடிந்த வரையில் கூடிய அளவு பயன்படுத்திக் கொள்வதின் மூலம் 'சுயதேவை' உற்பத்திகளைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

இன்றைய சூழ் நிலையில் அந்நிய உற்பத்திகளை வாங்கிப் பாவிக்கும் பழக்க தோஷத்திலிருந்து எம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். பொருளாதார விடுதலைக்கான வழி இதுவே. எமது பிரதேசத்திலுள்ள வளங்களில் 'பனைவளம்' இயற்கையானதும் முக்கியமானதுமாக அமைந்துள்ளது. இம் மூலவளத்தை முழுமையாகப் பயன்படுத்துவோமாகில் பிரதேச மூல வளம் பயன்படுத்தாத நிலையில் வீணடிக்கப்படும் நிலையைத் தவிர்க்கலாம். அந்நிய உற்பத்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி எமது உள்ளூர் உற்பத்திகளையே பாவிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வோமா

கில் எமது நிதிவளம் எம்மிடமே தங்கி நிற்கும். நகர்ப்புற மக்களும், கிராமிய மக்களும் தமது பொருளாதார வளம் வெளியில் செல்வதை ஒருபோதும் விரும்பவே மாட்டார்கள். எனவே, பொது மக்கள் அந்நியப் பொருட்களிலானமோகத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முன்வரவேண்டும்.

தற்போதைய நெருக்கடி மிக்க காலகட்டத்திலும் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களாயினும் சரி, பனம் பொருள் அபிவிருத்திச் சபையாயினும் சரி ஏற்றுமதிக் கிராமக் கம்பனிகளாயினும் சரி மக்களின் அன்றாட பாவனைக்கான -உணவுப் பொருட்கள்- கைப்பணிப் பொருட்கள்- அழகுசாதன கைவினைப் பொருட்கள்- தும்பு உற்பத்திகள்- மதுபான வகைகள் போன்ற இன்னோரன்ன பல்வேறு பனம் பொருள் உற்பத்திகளையும் சந்தைப்படுத்தி வருகின்றன. இவ் உள்ளூர் உற்பத்திகளில் மக்கள் ஆர்வம் காட்டத் தவறுவார்களேயானால் உற்பத்திகள் மட்டுப்படுத்தப்பட்டு எமது பொருளாதாரம் பாதிக்கப்படும் ஒரு ‘சூழ்நிலை’ உருவாகும்.

அந்நிய நாகரிகத்தில் கொண்ட மோகமும், இறக்குமதிப் பொருட்களுக்கு அடிமைப்பட்ட மனோநிலையுமே பாவனையாளர்கள் பங்காளர்களாக மாறாது பார்வையாளர்களாக இருந்து விமர்சிக்கும் நிலையை ஏற்படுத்தி உள்ளது. கூடிய மதுச்செறிவும், உடல் ஆரோக்கியத்துக்கான தாதுக்களையும் கொண்ட மருத்துவ ரீதியான சுதேச குடிவகைளை உற்பத்தி செய்தாலும் நாம் வீ. எஸ். ஓ., கல்லோயா, களுத்துறை என்றே வாயடிக்கின்றோம். பனை வெல்லம், பனம் சீனி, பனம் கோடியல், பனம் ஜாம், பனம் பானம் போன்ற சிறந்த தரமும் சுவையும் நிறைந்த உற்பத்திகள் தாராளமாக உற்பத்தி செய்யப்பட்டு வருகின்ற போதிலும் அந்நிய உற்பத்திகளே எமது வாய்க்கு ‘ருசி’ ஊட்டுவதாகக் கூறுவதைத் தவிர்த்துக் கொள்வோம்.

மகாத்மா காந்தி ஆரம்பித்து வைத்த ‘சுதேசிய’ உற்பத்தி இயக்கம் இன்று பாரதம் எங்கும் உடலுடன் இரத்தம் சேர்ந்தாற் போன்று மக்கள் வாழ்வோடு இணைந்து விட்டது. நாமும் காந்தி மகானின் ‘சுதேசிய’ உற்பத்தி இயக்கம் போன்று எமது உள்ளூர் உற்பத்திகளையும், மூலவள உற்பத்திகளையுமே பாவிப்போம் என்று சங்கற்பம் பூணுவோம். இறக்குமதிப்பொருட்களின் பாவனைமோகத்தின் அடிமைத்தளையைக் களைந்தெறியவும், உள்ளூர் உற்பத்திப்பொருட்களின் பாவனையையே பழக்கப்படுத்திக் கொள்ளவும் நாமனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இதனையே ‘கற்பக’மும் வேண்டி நிற்கின்றது.

# எத்தனை வருடமாயினும் கெட்டுப் போகாத “அதிசய” உணவு

இருபது இருபத்தைந்து பனைகளுள்ள ஒரு சிறிய காணித்துண்டிலிருந்து கிழங்கு வருமானம் 300 ரூபாவிலிருந்து 700 ரூபா வரை கிடைக்கும். பயிர்ச் செய்கைக்குதவாத கற்றரையாக இருந்தாலும் சரி, அதனுள் கிணறு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. அதனுள் வளர்ந்து ஆகக் கூடிய தாவரமாகப் பனை ஒன்று மட்டுமே இருக்க முடியும்.

அவித்த பனங்கிழங்கின் சுவையே அலாதியானது. இதன் நிகரற்ற சுவையினாற்றான் ஐந்தே ஐந்து கிழங்குகள் மட்டும் கொண்ட ஒருகட்டு இரண்டு ரூபாவிற்குமேல் விலை போகின்றது.

பனங்கிழங்கு முழுவதும் ஒரு பருவகாலத்தில் முற்றாக விற்க முடியாது போனால், இருக்கவே இருக்கின்றது, வேறு முறைகள்.

கொக்குவில்
எஸ். செல்வராசா

பனங்கிழங்கை அவித்துக் காய விடப்படுவதால் கிடைக்கும் ‘புழுக்கொடியல்’ எத்தனை வருடமாயினும் கெட்டுப்போகாத தன்மை வாய்ந்தது. இதுவும் பலராலும் விரும்பியுண்ணப்படும் ஓர் உணவுப் பதார்த்தமாகும். சிறுவர்க்கு அதனை உண்ணக் கொடுப்பதனால், அவர்களின் பற்கள் நன்கு பலமடையும். வைரமான அவ்வுணவை பற்களற்றவர்கள் உண்ண முடியாதேயெனக் கவலைப்பட வேண்டியதுமில்லை. இடித்து அரித்து எடுக்கப்பட்ட ஒடியல் மாவுடன் தேங்காயும், சீனியும் சேர்த்துண்பது நாவுக்கு நல்ல விருந்தாகும். இப்படியான ஒடியலின் சுவைபற்றி யாழ். மண்ணில் மேலும் எடுத்துக் கூறுவது, கம்பனுக்கு கவிதை பற்றி கூறுவது போலாகும்.

யாழ். பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மன்றம் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடாத்திய அபிவிருத்திக் கண்காட்சி பற்றி ‘ஈழநாடு’ இதழில் வெளியான விமர்சனத்திலிருந்து:—

“........... உதாரணமாகப் பனை வளத்தை அக்கண்காட்சியில் உற்று நோக்குவோமானால் எங்கள் பொருளாதாரத்திற் கேற்ற அத்தனை சிறப்பம்சங்களும் இலகுவாக அமைவதைப் புரிந்து கொள்ளலாம்.

# அது இனி எக்காலம்?

மாதா மடி மீது
 மகிழ்வாய்த் தலைவைத்து
ஏதும் கவலையின்றி
 இருந்திட்ட அக்காலம்

பள்ளி உடைகளிலே
 புழுதியுடன் பேனமை
அள்ளிச் சொரிந்து
 அடிபட்ட அக்காலம்

பாடசாலை வளவினிலே
 பக்குவமாய் நண்பருடன்
ஓடித்திரிந்திட்ட
 உறங்காத அக்காலம்

கன்னிப் பெண்களிலே
 கருத்தைப் படியவிட்டு
பின்னிப் பிணைந்திட்ட
 பிரியாத அக்காலம்

மணமேடை மீதினிலே
 மங்கை நல்லாளோடு
கனவு பலகண்டு
 களித்திட்ட அக்காலம்

விரும்பிக் கேட்டாலும்
 விலை கொடுக்க நினைத்தாலும்
திரும்பி வருமோ
 தேனான அக்காலம்!

மணி சிவசேனன்

❀

# விமர்சகர்கள்

ஆண்டினூஸ் குளித்துக் கொண்டிருக்கும் போது மினர்வா பார்த்து விட்டாள். அவன் அழகிலே மயங்கி அவனைக் காதலிப்பதற்காக மினர்வா தேவலோகத்திலிருந்து இறங்கி வந்தாள். ஆனால் பார்த்த மாத்திரத்தில் யாரையும் கல்லாக மாற்றி விடக்கூடிய ஒரு மாயக் கேடயத்தை அவள் கொண்டு வந்து விட்டதனால் ஆண்டினூஸ் அதை பார்த்ததும் திடீரென்று கல்லாக மாறிவிட்டான். உடனே மினர்வா பழையபடியும் ஆண்டினூஸை மனிதனாக மாற்றுவதற்கு வரம் வாங்குவதற்காக தேவலோகத்துக்குப் போனாள்.

அவள் மேலே போய் வரம் வாங்குவதற்கு முன்பாக ஒரு சிற்பியும் அவ்வழியாக ஒரு விமர்சகரும் வந்தனர். அவர்கள் ஆண்டினூஸின் உருவச்சிலையைப் பார்த்தனர்.



# நிலமும் நிலவும்

உருவகம்

நிலவளம், நீர்வளம், பசிய நறுஞ்சோலைகள், மலர்கள், மனிதர்கள் என்று பூமியில் பலதரப்பட்ட வளங்கள் இருந்தாலும் பூமித்தாய்க்கு ஒரே ஒரு விஷயத்தில் மாத்திரம் சிறிது கவலை ஏற்பட்டது. நிலவு தன்னைப் பார்த்து ஒரேயடியாகச் சிரிக்கிறதே என்பதுதான் அக்கவலை.

ஒருநாள் திடீரென்று சந்திரனைப் பார்த்துப் பூமி பின்வருமாறு கேட்டது: "கோடானுகோடி மனித இனங்களையும் அவர்களு

**நெல்லை க. பேரன்**

டைய அபிலாஷைகளையும் தாங்கிக் கொண்டு பூரிப்புடன் நான் வாழும்போது வெறும் பாறைகளையும் குழிகளையும் வைத்துக் கொண்டிருக்கும் நீ மாத்திரம் எப்படி என்னைப் பார்த்துச் சிரிக்க முடியும்? உனது சிரிப்பிலே குளிர்மை இருக்கிறது என்றாலும் எனக்கு அது அடியோடு பிடிக்கவில்லை. நீ கர்வம் பிடித்தவள். ஒரேயடியாக வாய் திறந்து சிரிக்காமல் கால் சிரிப்பும், அரைச் சிரிப்பும், முக்கால் சிரிப்புமாகச் சிரிக்கிறாய். பூரணையன்றுதான் முழுதாகச் சிரிக்கிறாய். உனக்கென்ன என்மீது அவ்வளவு ஏளனமா?"

நிலவுத்தாய் கட கட வென்று சிரிக்கிறாள். பூமித்தாயைப் பார்த்து, "அடி பேதைப் பெண்ணே! உன்னைப் பார்த்துச் சிரிக்காமல் வேறு என்ன செய்வது? கோடிக்கணக்காக மனிதர்களை வைத்திருக்கிறேன் என்று பெருமைப்படுகிறாயே.. அந்த

சிற்பி சொன்னார். "இந்தச் சிலை நன்றாகவே இல்லை மார்பு மிகவும் சுருங்கியிருக்கிறது. ஒரு கை மற்றொரு கையைவிட அரை அங்குலம் குறைந்திருக்கிறது. தோற்றமோ இயற்கைக்கு முரண்பட்டிருக்கிறது. இம் மாதிரியாகத் தோற்றமளிப்பது சாத்தியமில்லாத காரியம் என்று கூட நான் சொல்வேன். என் நண்பரே! நான் ஆண்டினூஸ் சிலை ஒன்று செய்திருக்கிறேன். அதைப் பார்க்க வேண்டும் நீங்கள்!"

விமர்சகர் சொன்னார்: "என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் சிலையை ஏதோ பார்க்கலாம் போல் இருக்கிறது. அவ்வளவு தான். ஆனால் ஆண்டினூஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவனோ அந்த நாட்டவனைப் போல் இல்லை. சிலையின் முகத்தோற்றத்தைப் பார்த்தால் இயற்கைக்கு ஒவ்வாமல் இருக்கிறது. அது சரி, நீங்கள் 'சிற்பத்தின் தோற்றங்களில் ஏற்படும் தவறுகள்' என்ற புத்தகத்தைப் படித்திருக்கிறீர்களா?"

- அம்பிரோஸ் பியர்ஸ்

மனிதர்களால் உனக்கு என்ன சுகம்? வீண் பாரம். மேலும் அவர்கள் எல்லோரும் ஆனந்தமாக வாழ்கிறார்களா? ஒருவருக்கொருவர் மதச் சண்டையும், மொழிச் சண்டையும் போட்டுக் கொண்டு கஷ்டப்படுகிறார்கள். கேவலம் நிறச்சண்டை கூடப் போடுகிறார்களே: வியட்நாமில் நடைபெற்ற யுத்தங்களும் அநியாயமான நாகசாகி (ஹிரோஷிமா) குண்டு வீச்சுக்களும் எத்தனை அழிவுகளை உனக்கும் மக்களுக்கும் தேடித் தந்தன? இன்னுமொரு கேவலம் கேள். உனது இலங்கை நாட்டிலே மக்கள் சாதிக்குச் சண்டை போடுகிறார்களே பார்த்தாயா? எதுவும் யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் சுத்த மோசம். பனங்காணிகளையும் தோட்டந்துரவுகளையும் ஆளுவதோடு நில்லாமல் தங்களைப்போன்ற மனிதர்களையும் அடக்கியாள நிற்கிறார்கள். ஆலயங்களின் கதவுகளைக்கூட எல்லோரும் வணங்கக் கூடாது என்று பூட்டி வைக்கிறார்களே.. இது எவ்வளவு கேவலம். இத்தகைய மானிடர்களைத் தாங்கிக்கொண்டு ஏதோ புதிதாகப் பிள்ளை பெறுபவள்போன்று பூரிக்கிறாயே.. சீ.. உனக்கு வெட்கமாயில்லை?''

பூமாதேவியின் முகம் சுண்டிப் போயிற்று. என்றாலும் பதிலுக்கு வார்த்தைகள் வெடித்தன. ''அடியே! நிலவுப் பெண்ணே! எனது மடியிலே வளரும் இயற்கைச் செல்வங்களையும் சிந்தனையாளர்களையும், கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் பத்திரிகையாளர்களையும், கவிஞர்களையும் கலைஞர்களையும் எண்ணிப்பார்த்தாயா? அவர்களைக் கண்டுதான் நீ பொறாமை கொள்கிறாய் போலும்''

மீண்டும் நிலா நங்கை கட கடவெனச் சிரித்தாள்.

''போடி அசடே! உனது கவிஞர்களா? ஐயோ பாவம்! அவர்கள் என்னைத் தானே பார்த்து வர்ணிக்கிறார்கள். எனது குளிர்மை பட்டுத்தான் அவர்களுக்கு கவிதையே பிறக்கிறது. பெண்களைக் காக்கா பிடிப்பதில் வல்லவர்கள். அதுதான் பெண்ணின் முகத்தை எனக்கு ஒப்பிட்டுப் பாடுகிறார்கள். நீ வைத்திருக்கும் எந்த மொழிக்கவிஞன் என்றாலும் என்னைக் கண்டதும் அவனுக்குக்கவிதை பிறந்துவிடும். ஏன் தமிழர்களுடைய இலக்கிய வரலாற்றை எடுத்துப்பார். சங்க காலம்தொட்டு இருபதாம் நூற்றாண்டு வரையும் வெளி வந்த கவிதைகளையும், சிறுகதைகளையும் எடுத்துப்பார். அவற்றில் என்னைப்பற்றி எவ்வளவு தூரம் வர்ணித்துள்ளார்கள் என்பது புரியும். மங்கியதோர் நிலவி

✽ ஊர் வம்பு பேசவே ஒரு கூட்டம் இருக்கிறது. இவர்கள் எதையும் ஒழுங்காக்க முடியாதவர்கள்; உருவாக்க இயலாதவர்கள்.

✽ ஓட்டைக் குடிசை. ஒளி இல்லாதவிளக்கு. சோறில்லாப் பானை. சுகமில்லாத வாழ்வு. ஒட்டிய வயிறு. இவையே தான் ஏழையின் சின்னங்கள்.



னிலே கனவுகண்ட கவிஞன் பாரதியை மறந்து விட்டாயா? ஏன் உன் சினிமாக் கவிஞர்கள் எல்லோரும் என்னைத் தானே தூக்கிப்பிடிக்கிறார்கள். நான் வராவிட்டாலும் காட்போட்டிலாவது என்னைச் செய்து மஞ்சள் வர்ணமடித்து சினிமாத் திரைகளில் காட்டுகின்றார்களே!''

பூமித்தாய்க்கு ஒரே வெட்கமாக போய்விட்டது. சே! இவளென்ன இவ்வளவு தூரம் மடக்குகிறாளே. என்று யோசித்தாள். என்றாலும் விடவில்லை. மீண்டும் பேச்சுக் கொடுத்தாள்.

''எனது மக்கள் விஞ்ஞான அறிவு படைத்தவர்கள். வீணாக டம்பம் பேசாதே! உன்னிடம் கூட அவர்கள் வந்துவிடுவார்கள். ரஷ்யர்களும் அமெரிக்கர்களும் விண்வெளி ஆராய்ச்சி செய்வதை நீ பார்த்தாயா?''

நிலா மங்கை மறுமொழி புகன்றாள். ''பார்த்தேன் பார்த்தேன். சொந்த நாட்டிலுள்ள மக்களின் பிரச்சினைகளை மறந்து அவர்களைத் திசை திருப்புவதற்காக அவர்கள் என்னைத்தேடி ஓடி வருகிறார்கள். மனிதர்கள் பூவுலகில் செய்கிற அநியாயங்கள் போதாதென்று என்மீதும் தாவப் பார்க்கிறார்கள். நான் கற்புள்ளவள். என்னை அவர்கள் நெருங்கமுடியாது. சே! மனிதர்களுக்கு இடம் கொடுப்பது போல மட்டரகமான புத்தி வேறு எதுவும் இருக்கமுடியாது.''

வானத்திலே கர். ர். ர்ர்.. கர்.. என்ற இரைச்சல் பெரிதாகக் கேட்கிறது. பூமித்தாய் இப்போது கட கடவென்று சிரித்தாள். ''அடியே மண்டு எனது மனிதன் இப்போது உன்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறான். எனது உலக மக்களின் பிரதிநிதிகளாக மூவர் வந்துகொண்டிருக்கிறார்கள். அதுதான் நீ கேட்கும் சத்தம். அவர்களில் இருவர் உன் மீது காலடி வைப்பார்கள். அப்போது உன் கற்பு என்ன செய்யும் என்பதைப் பார்க்கப்போகிறேன். நீ உயரே இருந்து என் மக்களுக்குப் பம்மாத்துக் காட்டியது போதும். இனிமேலாவது வாய் பேசாமல் அடங்கியிரு.''

நிலா மங்கை திகைப்படைந்தாள். என்ன ஆச்சரியம்! அதிசயத்திலும் அதிசயம்! தன்னை நோக்கி விண்கலம் ஒன்று தாய்க் கப்பலும், சேய்க்கப்பலும் இணைக்கப்பட்டுவந்துகொண்டிருப்பதைக் கண்டாள். ஐயகோ: இது என்ன அக்கிரமம்; பூவுலக மனிதன் என்னைத் தொட்டு விடுவான் போலிருக்கிறதே:; என் கதை முடிந்த கதைதான்.'' என்று சலனப்பட்டாள்.

விட்டானா மனிதன்?

விண்வெளிக் கலத்தை நிலா மங்கையின் உடலில்- தரையில் இறக்கிய வீரர்கள் நீல் ஆம்ஸ்ட்ராங்கும், எட்வின் அல்டிரினும் தங்கள் அமெரிக்கக் கொடியை அவளது உடலிலே குத்தி வெற்றிவாகை சூடினார்கள். மனிதனது காலடி ஒவ்வொரு தடவையும் படப்பட. நிலவு நங்கை கூனிக் குறுகினாள்

வேதனை தாளாது துக்கப்பட்டாள். பூவுலகின் பூதாகரமான வாழ்க்கைப்பிரச்சினைகள். விலைவாசி உயர்வு, வேலையில்லாத்திண்டாட்டம், தற்கொலைகள், கற்பழிப்புகள், களவுகள் எல்லாம் இனிமேல் தன்மீதும் பரவப்போகின்றனவே என்று அஞ்சி நடுநடுங்கினாள்.

பூமித்தாய் இப்போது கெக்கட்டமிட்டுப் பலமாகச் சிரித்தாள். "அடி பேதையே! இனிமேல் பார். இவ்வளவு காலமும் எனது கவிஞர்கள் உன்னை அண்ணாந்து பார்த்துப் பாடினார்கள். இனிமேல் உன்மீது ஏறி உட்கார்ந்து பாடுவார்கள். வீணாக பெருமையடித்தாயே! இப்போது பார்த்தாயா மானுடனின் சாதனையை! பூவுலகம் என்ன சுண்டைக்காய் என்று நினைத்தாயா? பார்.. பார்.. அந்தச் செவ்வாய்ப் பெண்ணின் கர்வத்தையும் அடக்கிச் சகல கோளங்களையும் ஆளப் போகிறேன்!.. சாஸ்திரங்களையேபொய்யாக்குகிறேன்!.. நீ மட்டும் இனியாவது ஒழுங்காயிரு.. என் பூவுலக மனிதர்களைப் பார்த்துச் சும்மா பல்லை இளிக்காதே."

நிலா மடந்தை நாணத்தால் தலை குனிந்தாள்.

❋ ❋ ❋


உங்கள் இல்லத்திற்கு வரும்
விருந்தினர்களைவரவேற்று உபசரிக்க
இனிய வைபவங்கள் சிறக்க
எம்மை நாடுங்கள்

இரும்புக் கதிரைகள் — வாங்குகள்
எவர்சில்வர் — றே

குறைந்த வாடகை! நிறைந்த பயன்!

**அரியாலை தெங்கு பனம் பொருள்**
**உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்**

இல. 15, நடுத்தெரு லேன்,
கண்டி வீதி, அரியாலை




# நாட்டை விட்டு தப்பி ஓடிய ஐந்து ஜனாதிபதிகள்

உலகம் முழுவதும் தமது ஆதிக்கத்திலேயே என்று தலை கால் தெரியாமல் ஆட்சிபீடத்திலிருந்து அட்டகாசம் செய்த தலைவர்கள் இப்போது இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டார்கள். இவர்களில் சிலருக்குப் புகலிடம் அளிக்கக்கூட வேறு நாடுகள் தயக்கம் காட்டுகின்றன. இதனை அந்த அடிச்சுவட்டில் செல்லும் மற்றத் தலைவர்களும் நினைத்துப் பார்த்தால்.....!

அதிகார மமதையால் மக்களை ஆட்டிப் படைத்துச் 'சுகம்' அனுபவித்த தலைவர்களுக்கு இறுதியில் மக்களே தகுந்த பாடம் புகட்டியுள்ளனர். அண்மையில் இந்த மக்கள் என்னும் சூறுவளிக்குள் சிக்கித் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம், என்று தமது நாட்டை விட்டுத் தப்பி யோடியவர்கள் இருவர். ஹெய்தி ஜனாதிபதி ஜீன் கிளாடி டுவாலியூர் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பேர்டினண்ட் மார்க்கோஸ் ஆகியோரே இவ்விருவரும்.

கரிபிய பிரதேசத்தில் ஹெய்தி ஜனாதிபதி டுவாலியூரின் ஆட்சிக்கும் இவ்வாறே மக்கள் முடிவு கட்டினார்கள். 7. 2. 86ல் இவர் நாட்டை விட்டுத் தப்பியோடினார். எந்தவொரு நாடும் இவருக்குப் புகலிடம் அளிக்க முன்வரவில்லை.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதிமார்க்கோஸும் இருபது வருட கால ஆட்சித் தர்பாரின் பின் மக்களிடமிருந்து தப்பிக்க முடியாது. நாட்டை விட்டு ஓடித்தப்பினார்.

கியூபாவில் ஜனாதிபதி பட்டிஸ்டாவின் கொடுங்கோல் ஆட்சிக்கும் மக்கள் இப்படியே முடிவு கட்டினார்கள்.

நிக்கரகுவாவில். ஜெனரல் சோமோசாவின் சர்வாதிகார ஆட்சிக்கும் இந்த முடிவே ஏற்பட்டது.

உலகையே ஒரு காலத்தில் ஒரு கலக்குக் கலக்கிய உகண்டா ஜனாதிபதி இடி அமீன் இரவோடிரவாக நாட்டை விட்டு ஓடித்தப்பினார்.

இந்த ஐந்து ஜனாதிபதிகளுக்கும் இப்படியும் ஒரு நிலையா என்று இன்று எண்ணத் தோன்றுகிறது அல்லவா?

---

❋ தூங்கும் போது ஒருவன் பேசினால் அது உளறல். பலர் தூங்கும் போது ஒருவன் பேசினால் அது மேடைப் பேச்சு.

---

# புண்பட்ட இதயங்கள்

திருமதி தெ. செழுங்கதிர்ச்செல்வி

சிறுகதை

அமைதியில்லாது மனம் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. வேலை செய்வதிலும் புலன் செல்லவில்லை. எங்காவது தனிமையில் இருந்து சிந்திக்க வேண்டும் போலுள்ளது. இவையெல்லாம் ஏன்? என்னையே நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். ஏதோ ஒன்று என்னை உறுத்துகின்றது. அது என்ன என்ற என் சிந்தனையோட்டத்தில் காலை கண்ட நிகழ்ச்சி என் மனக்கண்முன் விரிய அதிலேயே லயித்து விடுகின்றேன்.

கடந்த ஏழு வருடங்களுக்கு முன்பு... ராஜா தனது ஒன்பது வயதில் தந்தையுடன் தோட்ட உதவிக்காக கூளாமுறிப்பிற்கு வந்திருந்தான். அவனது தாயும், தங்கைகள் மூவரும் முல்லைத்தீவில் இருந்தனர். வறுமை என்னும் கொடிய அரக்கன் தான் அவர்களது நித்திய சொந்தமாகி விட்டிருந்தது. வறுமையிலிருந்து மீளமுடியாது தவித்துக் கொண்ட குடும்பத்தலைவன் நித்தமும் குடித்து விட்டு வந்து அடியும் உதையும்தான் அவர்களது உணவு. பொன்னம்மாவோ நான்கு குழந்தைகளுக்கும் உணவளிக்க முடியாது குடிகார ஆறுமுகத்திடம் அடிவாங்கியே சலித்துப் போயிருந்தாள்.

தந்தை, தாய் சகோதரம் என்று ஒருவித சொந்த பந்தமுமில்லாத பொன்னம்மாவைக் கட்டிக் கொண்ட நாளில் ஆறுமுகம் நல்லவனாகத்தான் இருந்தான். நாளடைவில் கெட்ட நண்பர்களின் சேர்க்கை அவனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. உழைத்துக் குடிக்க வழியில்லாத நேரத்தில் பொன்னம்மா வீடு வீடாகப் பிள்ளைகளுடன் சென்று இடித்துக் குற்றிச் சாப்பாட்டுக்கெனக் கொண்டு வரும் பணத்தையும் பிடுங்கிக் கொண்டு விடுவான்.

பசி காதை அடைக்க பிள்ளைகளின் ஓலம் நெஞ்சை அழுத்த கஷ்டப்பட்டு உழைத்த பணமும் கடைசியில் இல்லாது போக தூக்கம் பாதி, தூங்காதது பாதி என ஒவ்வோரு விடியற்காலையையும் எதிர்நோக்கியே வாழப் பழகி விட்டாள் பொன்னம்மா. நாட்கள் விடிந்து இருண்டு கடந்துசென்றாலும், அவள் வாழ்வு ஒவ்வொரு நாளும் விடியாமலே இருட்டாக சூனியமாகச் சென்று கொண்டிருந்தது.

பொன்னம்மாவின்கஷ்டத்தைக் கண்டு எத்தனையோ பேர் “ நீ உன் பிள்ளைகள் வளர்ந்த பின்னராவது நல்லாக இருப்பாய்'' என்றுசொல்வார்கள் சில வேளை அப்படியும் இருக்கலாம் என்ற நம்பிக்கையில் தான் அவளும் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள். நாளை நமக்கும் காலம் வரும் என்ற அவாவில்தானே எத்தனையோ மானிட ஜென்மங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அதில் ஒரு அங்கம் தானே அவளும்.

ஒவ்வொரு இரவிலும் ஆறுமுகத்தின் பல்லவியைக் கேட்டே அலுத்துப் போய் விடும். காலையில் எழுந்ததும் பசி வயிற்றைக் கிள்ள அவளின் உழைப்பால் கிடைத்த கொஞ்ச நஞ்ச உணவையும் தனக்கும் பங்காக்கிக் கொண்டு தனது வழமையான நிகழ்ச்சிக்குச் சென்று விடுவான் ஆறுமுகம். துயரங்கள், துன்பங்கள், மன உணர்ச்சிகள், வேதனைகள் இப்படியே காலம் கடந்து கொண்டிருந்த போதுதான் கூளாமுறிப்பில் அவர்களுக்குக் கிடைத்த தோட்டக்காணியில் தோட்டம் செய்யவென ஆறுமுகம் ராஜாவுடன்வந்திருந்தான். ஆறுமுகத்தின் மனம் மாறி விட்டது. தனக்கும் விடிவு காலம் வரத்தான் போகின்றது என்று எண்ணிக் கொண்டாள் பொன்னம்மா.

தோட்டம் செய்வதில் முதலில் பல கஷ்டங்கள் அவர்களை அணுகினலும் இருவரும் சேர்ந்து கஷ்டங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். உணவைக் கூட உண்ண மறந்து தொழிற் பட்டனர். இப்படி முன்னேறிவரும் நாளில் தான் ஆறுமுகத்தின் கடந்த கால சிநேகிதர் ஒருவர் வந்திருந்தார். அவருடன் பொழுதைப் போக்க விரும்பிய ஆறுமுகம், ராஜாவை வீட்டிலிருக்கக் கூறிவிட்டுச் சென்று விட்டான்.

தந்தை வருவாரென எதிர் பார்த்திருந்த ராஜா. காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாத களையால், ஒரு தேத்தண்ணியாவது குடிக்கலாம் என்றெண்ணி, தங்கள் சின்னக் குடிசையருகே அடுப்பினில் தண்ணீரைக் கொதிக்க வைத்துக் கொண்டிருக்கும் போது, காலை வாங்கிய கால்றாத்தல் சீனியின் நினைவு வந்தது. சீனியைக் கையில் வைத்து நக்கி நக்கியே குடித்துப் பழகி விட்ட அவனுக்கு இன்று தன்னைக் கண்டிக்க ஒருவரும் இல்லைத் தானே என்ற துணிவில் இன்றொருநாளாவது நிறையச் சீனி போட்டுக் கரைச்சுக் குடிக்கலாம் என்று எண்ணியவன் அதைச் செய்யவும் துணிந்து தேத்தண்ணியைப் போட்டுச் சீனியைக் கரைத்துக் கொண்டிருக்க ஆறுமுகம் படலையைத் திறந்து கொண்டு வதந்ான்.

தகப்பன் வருவதைக் கண்ட ராஜாவின் மனதில் திடீரென ஆயிரம் எண்ணங்கள் தோன்ற, தந்தையின் கொடுமையை ஏற்கனவே எத்தனையோ தரம் அனு

# பனையை வளர்ப்பின் "யாழ்" வாழும்!

எம். எஸ். ஏ.

பனையே பனையே உன்னைப் போல்
  பலனைத் தருவார் உள ராமோ!
பனையே உன்னை நம்பி யன்றோ
  பலர் யாம் வாழ முனைகின்றோம்!

பனையின் பயனே இயற்கை யதாம்
  பனையை நட்டுப் பாத்தி கட்டி
பனையை அன்று வளர்த்தவர் ஆர்?
  பனையை இன்று பேசும் யாம்!

பனையில் ஏறும் மனிதர் போல்
  பாரினில் யாரும் கணித்தனரா
இணையில்லாத கற்பகமே
  எனத்தான் இன்று புகழ் பவரே!

எமது நாட்டுப் பொரு ளன்றோ
  எமக்கு உதவும் பொருளாகும்
பனையின் கதையே எம் கதையாம்
  பனையை வளர்ப்பின் யாழ் வாழும்!

பனையின் 'பரிசை' அறிந்தவர்கள்
  பனம் சபை, சங்கம் வளர்த்தனரே
பனையை நம்பி வாழ்பவரின்
  பயணம் பனையின் சுபீட்சமதே!

---

பவித்தவன், பேந்தப் பேர்த விழித்துக் கொண்டு, தேத்தண்ணியைக் கூடக் குடிக்க மறந்து கைகளில் வைத்துக் கொண்டிருந்தான். தள்ளாடிய படியே வாயில் வந்ததை யெல்லாம் வார்த்தைகளாக்கிக் கக்கிக் கொண்டு வந்த ஆறுமுகம், "என்னடா ராஸ்கல் நான் கஷ்டப்பட்டு உழைத்து சீனி வாங்கி வைக்க நீர் கரைச்சுக் குடிக்கின்றீரோ?" என்று சொல்லிக் கைகளை ஓங்கிக் கொண்டு ராஜாவிற்குக் கிட்டச் சென்றான். தேத்தண்ணிக் கிண்ணியைக் கீழே வைத்து விட்டு 'இல்லையப்பா நான் இனி யொரு நாளும் கரைச்சுக் குடிக்க மாட்டேன் என்று கத்திய ராஜாவைத் தள்ளி விழுத்தி இரு கால்களிலும் பிடித்து ஒரே ஓங்காக ஓங்கி அருகிலிருந்த மரத்துடன் தலையை அடித்தான் ஆறுமுகம். அவன் அப்படி அடிக்கும் போது கூட அந்தப் பிஞ்சு, "அப்பா! நான் கரைச்சுக் குடிக்க மாட்டேன்: இனி ஒரு நாளும் கரைச்சுக் குடிக்க மாட்டேன்" என்று ஓலமிட்டது.

மிருகத்திலும் கேவலமாக தனது மகனை ஓங்கியறைந்த ஆறுமுகம், எதுவித உணர்வுமற்று தலையிலிருந்து ஆறாக இரத்தம் பெருகிய ராஜாவைக் கண்டதும் தன்னிலை அடைந்தான். ஒரு கணம்! அப்படியே விறைத்துப் பார்த்தான். உடம்பில் சிறு அசைவுகூட இல்லை. தான் ஒரு கொலையைச் செய்து விட்டேன் என்றுபுரிந்துகொண்டதும், இவ்விடத்தில் நிற்பது ஆபத்து என்று அங்கிருந்துஓடிப்போய் விட்டான். மகனின் இந்நிலையிலும் மனமிரங்காத மிருகம் தன்னைக் காப்பாற்றச் சென்று விட்டது.

மண் எண்ணை இருந்தால் கொஞ்சம் வாங்கலாம் என்று செல்லையா ஆறுமுகத்தின் தோட்டத்திற்கு வந்தான். அங்கே இரத்தம்தலையிலிருந்து வடிந்தபடி முனங்கிக் கொண்டிருந்த ராஜாவைக் கண்டதும் அயலிலுள்ள ஒருவனின் துணையுடன் ராஜாவை முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தான். இரவானதால். பொன்னம்மாவிற்குத் தகவல் கொடுக்க முடியவில்லை.

காலையில் தகவல் கேட்டு பொன்னம்மா ஓடோடி வந்தாள். எத்தனையோ இன்னல்களுக்கு நடுவே தன் வாழ்விற்கு ஒளியேற்றுவான் என்று எதிர்பார்த்த தன் செல்வ மகனைக் கண்டதும் அந்த ஏழைத் தாயுள்ளம் குமுறியது. அழுதழுது அவளது கண்ணும் தொண்டையும் வரண்டு விட்ட வேளையில் மாலை மூன்று மணிக்கு ராஜா கொஞ்சம் அசைவு பெற்றான். ஆனால் அந்த இன்பம் நொடிப் போழுதில் சுக்கு நூறாகி விட்டது. அந்த ஆஸ்பத்திரியே அதிரும்படி "அப்பா நான் கரைச்சுக் குடிக்க மாட்டேன். கரைச்சுக் குடிக்க மாட்டேன். கரைச்சுக் குடிக்க மாட்டேன்" என்று பலமுறை அலறிய ராஜா திரும்பவும் மயங்கி விட்டான்.

எதற்காகத் தன் அருமை மகனுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கும் என்று ஊகித்தாள். ராஜாவிற்கு இவ்வளவு நடந்தும் இவ்வளவு நேரமும் ஆறுமுகம் வராதது அவளின் ஊகத்திற்கு வலுவூட்டியது. அது உண்மையாக, இருந்தால்... என்று எண்ணியதும் கதறி யழுதாள். "சீனி கரைத்துக் குடித்ததற்காக ராஜாவிற்கு இக்கதி வந்ததே. இப்படி ஏன். கடவுளே எங்களைப் படைச்சாய்" என்று எண்ணி எண்ணி ஏங்கியழுதாள், எத்தனையோ வீட்டில் பாலுக்கு சீனியில்லை என்று அழும் போது என் மகனுக்கு வெறும் தேத்தண்ணிக்கு கரைச்சுக் குடிக்க முடியாதா என்று ஆண்டவனை நொந்து கொண்டாள்.

ஒவ்வொருநாளும் கண்விழிக்கும் போதெல்லாம் ராஜா இதையே திரும்பத் திரும்பக் கத்துவதும். மயங்குவதுமாக இருந்தான்.

ஆஸ்பத்திரியில் அவனை வைத்திருக்கவும், பார்க்கவும் உடனுக்குடன் உதவி செய்யவும் செல்லையாதான் பொன்னம்மாவிற்கு உதவினான்.

பத்துப்பதினைந்து நாட்களில் மயக்கம் தெளிந்து ராஜா இருக்கத் தொடங்கி விட்டான். என்ன நடந்தது. எப்படி நடந்தது என்று பொன்னம்மா கேட்ட கேள்விகளுக்கு சுயமாகச் சிந்தித்துப் பதில் சொல்லக் கூடிய நிலையில் ராஜா இருக்கவில்லை. இதற்காக அவனை வேறெங்காவது கொண்டு போய் வைத்தியம் செய்ய அவர்களால் முடியவில்லை. தலைமேற்பட்ட காயம் ஆற ஒரு மாதம் சென்றது. காயம் ஆறி வந்ததும் வீட்டிற்குக் கொண்டு சென்று விட்டனர். உறவில்லாத செல்லையா பொன்னம்மாவின் குடும்பத்துடன் சேர்ந்து கொண்டான். ஆறுமுகம் போனவன் போனவன் தான்.

எப்போதாவது, ராஜா யோசிப்பான் ''அம்மா, அப்பா' என்னைச் சீனி கரைத்துக் குடிக்க வேண்டாமென்று மரத்திலை அடிச்சவர்'' என்று சொல்ல நினைப்பான். அப்போதெல்லாம் 'அப்பா, நான் கரைச்சுக் குடிக்க மாட்டேன்' என்ற அவனது தாரக மந்திரம் ஒலித்துக் கொண்டே இருக்கும். சுயமாகச் சிந்தித்து ஒரு வேலையும் செய்யமாட்டான். சொல்லும் வேலைகளைச் செய்வான். குடும்பத்தைக் காக்க செல்லையா துணை இருந்ததும் பொன்னம்மா தன் தொழிலை நிறுத்திக் கொண்டாள். ராஜா எங்காவது புல்லுப் பிடுங்க, கொத்த என்று சென்று ஐந்தைப் பத்தை தாயிடம் கொடுப்பான். வறுமை என்ற சொந்தம் மட்டும் அவர்களை விட்டுப் போகாதிருந்தது. வேலைக்குச் செல்லுமிடங்களில் கூட வலி வந்து திண்டாடுவான் ராஜா. ஒருநாள் கொத்திக் கொண்டிருக்கும் போது மண்வெட்டி மீது விழுந்து தன்னை வெட்டிக் கொண்டான்.

கூளாமுறிப்பில் தோட்டத்திலிருந்து விட்டு முல்லைத்தீவிற்கு வர பஸ்ஸைப் பார்த்துக் கொண்டிருந்தனர் பொன்னம்மாவும் ராஜாவும், திடீரென ''அம்மா, அப்பா என்னைச் சீனி கரைச்சுக் குடிக்க வேண்டாமென்று மரத்திலை ஓங்கி அடிச்சவர்' என்று சொன்ன ராஜாவை நோக்கி ''ஐயோ! என்ரை ராஜா, என்று கத்திக்கொண்டு வலிப்பு வந்து வேலியுடன் தூக்கியெறியப்பட்டு துடிப்பதைக் கண்ட பொன்னம்மா ராஜாவை நோக்கி ஓடினாள். அப்போதும் அவன் ''அப்பா, நான் இனி கரைச்சுக் குடிக்க மாட்டேன். குடிக்கமாட்டேன்'' என்று ஓலமிட்டான். வலிப்பு நின்றதும் அவனைத் தூக்கி நடத்திக் கூட்டிக் கொண்டு வரும் போது தான் கவனித்தேன். முதுகில் தடி குத்திய காயத்திலிநந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

பதினாறு வயது நிரம்பிய அந்த இளைஞனுக்காக- இல்லை இல்லை. இன்னும் பிஞ்சு உள்ளமாக விளங்கும் குழந்தை ராஜாவிற்காக – என் கண்களிலிருந்து நீர் வழிந்தது. தாயுள்ளத்திற்காக வேதனை ஒரு புறம். அந்தப் பிஞ்சு மகனுக்கு இது தான் வாழ்வு முழுவதும் கதியா? என்ற வேதனை ஒரு புறம். எல்லாம் என் இதயத்தை அழுத்த ஓவென்று அழவேண்டும் போலிருந்தது. அழலாமா? இது அலுவலகம் என்பது அப்போதான் என் நினைவினில் வந்தது. என்னுள்ளேயே அழுகையை அடக்கிக் கொண்டேன். புண்பட்ட இதயங்களுக்காக என் புண்பட்ட இதயத்திலிருந்து நெடு மூச்சொன்று என்னையும் மீறி வெளிப்பட்டது. ஆறுமுகம் மட்டும் என் கண்களில் பட்டால்?... அவனை என் கண்களாலேயே சுட்டெரித்து சாம்பராக்கி, நான் அவனைக் கரைத்துக் குடித்திருப்பேன்... இல்லை... இனியும் கரைத்துக் குடிப்பேன்.

(யாவும் கற்பனை)

உழுவோம்...
உழைப்போம்...
உயர்வோம்...



மில்க்வைற் தயாரிப்புகளுக்கு வழங்கும் ஆதரவு நாட்டின் நற்பணிக்கே!

20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அழகிய பாரதியார் ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பதநீர்




புத்தம் புதிய பதநீர் போதை தரக் கூடியதல்ல. இந்துஸ்தானில் இது 'நீரா' எனப்படும். பதநீர் பருகியதால் ஏராளமானோர் மலச்சிக்கலிலிருந்து குணமடைந்திருக்கின்றனர். தினந்தோறும் காலையில் தேனீர் பருகுவதற்குப் பதிலாக ஒரு குவளைப் பதநீர் அருந்தினால் காலை உணவாக வேறெதுவும் தேவைப்படாது.

- மகாத்மா காந்தி

மில்க்வைற் தொழிலகம்
த. பெ. இல. 77, 525/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# போலிகள்

-வேலணை நித்தி

அவர் ஒரு பழுத்த ஆசிரியர். ஆனாலும் கொஞ்சம் செயலில் வேகம் அதிகம். பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி என்ற தோற்றம். இன்னும் எப்படி எப்படி இது போன்றவர்களை வர்ணிக்கலாமோ அத்தனை அம்சங்களையும் பெற்றிருந்தார். ஆனாலும் பசுவாக பழகும் சுபாவம் கொண்டவராதலால் அவரைப் பற்றி புழுகாத ஆசிரியர்களே கிடையாது.

இவரது உண்மை உள்ளம் புரிந்த சில மாணவர்கள் இவருக்கு நவநாகரிகம் நிறைந்த ஒரு நாமத்தைச் சூட்டினார்கள். அதுதான் ''இமிடேஷன்''.

ஒருநாள் 'இமிடேஷன்' தனது நண்பர் ஒருவரிடம் ஒரு தங்க வளையலைக் கொடுத்து ஆயிரம் ரூபா ஒருநாள் தவணையில் கடனாகப் பெற்றுச் சென்றார். போனவர் போனவர்தான். ஒரு கிழமையாகியும் ஆளைக் காணவில்லை. ''ஏதேனும் வருத்தம் கிருத்தம் வந்து ஆள் படுக்கையில் கிடக்குது போலை'' என்று நினைத்த நண்பர் 'இமிடேசனைத்' தேடிப் புறப்பட்டார். அவர் வாடகைக்கு குடியிருந்த வீட்டை அணுகிய போது யார் யாரோ அறிமுகமில்லாத சிலர் நின்றதைக் கண்ட நண்பர், ''மனுசனுக்கு ஏதோ பெரிய வருத்தம் போலை'' என்று நினைத்தார்.

இவரைக்கண்ட புதுமுகம் ஒன்று 'நீர் யார்?' என்று கேட்டது' நண்பர் சிறிது அதிர்ந்தார். தன்னைச் சுதாகரித்துக் கொண்டு நான் தான் சிவசிதம்பரம். எனது நண்பரைப் பார்க்க வந்தனான். என்றார். ''நண்பரோ? யாரவர்?'' என்று குத்தலாக கேட்ட கேள்வியினை சட்டை செய்யாது. ''இமிடேசன் சுப்பையா தான் எனது நண்பர்'' என்று பதிலிறுத்தார் சிவசிதம்பரம்.

'அவரோ? அவர் வீட்டை விட்டுப் போய் இரண்டுமாதமாகி விட்டதே' என்றார். சிவசிதம்பரத்தாருக்கு எல்லாமே சிதம்பர சக்கரமாகச் சுழன்றது. பரவாயில்லை மனுசன் காப்பைத் தந்திற்றுத் தானே காசை வேண்டிக் கொண்டு போனவன் என்று நினைத்தபடி வீட்டுக்குப் போகத் திரும்பினார். திரும்பியவருக்கு தூரத்தே வரும் மனைவியின் வேகம் கொஞ்சம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ''என்னப்பா சங்கதி ஏன்? விழுந்தடிச்சுக் கொண்டு வாறாய்?'' என்று கேட்டார்.

''அறுவான் சுப்பையன் தந்த காப்பு இமிடேசனாமப்பா. நகைக்கடையிலே நிறுத்துப் பார்ப்பம் எண்டு போக நகைக்கடைக்காரன் பேசுறான்'' என்று ஓலமிட்டாள் மனைவி. உலகறியா நிலையிலும் உணர்வறிந்து மாணவர்கள் சுப்பையாவுக்குச் சூட்டிய பட்டத்தை எண்ணியவாறே மனைவியை ஆசுவாசப்படுத்தினார் சிவசிதம்பரத்தார்.



# வருத்தப்பட்டு...

''வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே
என்னிடத்திலே வாருங்கள்
நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்''
மனுமகனின் ஆத்மதரிசன அழைப்பு
அன்று கேட்டது.

பரநலத்தின் உச்ச மேன்மையாக
அவனது புனிதத் தோள்களில்
பூவுலகின் பாவங்கள் சிலுவையாய் ஏறின.

சத்தியத்தின் பலத்தில்
சுலபமாய்ச் சுமந்தான்.

பரநல ராஜ்யத்தில் கிடைப்பது முட்கிரீடம்
ஆனாலும்,

அழுக்காறு, அவா, வெகுளி
இன்னாச் சொல்லாக
ஆறாத புண்கள் - சுமைகள்
அவன் முதுகில் இல்லை
- அதனால்
அவனது தோளில்
மனித குலத்தின் பாபங்கள்
அனைத்தையுமே சுமக்க முடிந்தது.

அவனே உதாரணமாக...
எம்மவர் சிலுவையை
சுமக்கத் துணிந்தோம்.
ஆனாலும் அந்த ஆத்மாவின் பலத்தில்
துரும்பளவு, தூசளவு, அன்றித்
துகளளவு தானும் பெற்றிலோம்.

சீதனம், சாதி, அழுக்காறும்
அவா, வெகுளி எல்லாமும்
எமக்கே உரிய
பாரம்பரிய மயக்கத்தில்,
எமது முதுகின் சுமைகளாக
இறுக்கி அழுத்திட
மற்றவர் சிலுவையை
எப்படிச் சுமப்போம்?

எமது இனத்தின் விழிப்பில் கிடைத்த
விழுப்புண்கள் என நாம்
நினைத்து மயங்குவது
புழுப் புண்கள் அல்லவா?
சிலுவையைச் சுமந்திடவும்
சுதந்திர பலம் பெறவும்
தீமையை அகற்றுவோம் என்றே
நாம் எடுத்திட்ட கூர் வாள்கள்
எதிரியின் நெஞ்சில் அல்ல
எம்மவர் முதுகில் அல்லவோ
பாய்கின்றன.

இது ஏன்?
எங்கே பலவீனம்?

வாள் பிடித்தவன் முதுகிலும் புண்கள்!

உங்களுக்கு நிலம் கிடைக்கு முன்னரே
மற்றவனுக்கு அளந்து விட முயன்றீர்!
அந்த அளவிலும் விதம் விதமாக
எல்லை கட்டி உயரச் சுவரெழுப்பி
சுயநலச் சுமைகளால் சுருண்டு குமைந்து
ஒருவருக்கொருவர்
மயிர்கொட்டிப் புழுக்கள்
தனியே திரிவது போல்
சோதனையின் வெம்மையில்
ஆத்மபலம் அற்று
அந்நியமாய் விட்டீர்கள்!
பாவம்! பாவிகளாய் திகைத்திடும் மக்கள்!
அவர்கள் சிலுவைகள் அப்படியே கிடக்க
வருத்தப்பட்டு...... வருத்தப் பட்டு......
மீண்டும் குலைந்து...... மீண்டும் குமைந்து
முதுகில் புண்கள்...
குறுவாளின் புண்கள்...
அவைகள்
விழுப்புண்களேயல்ல... அல்ல...
எப்போ விழிப்பீர்...?
எப்போ விடியும்...?

– கே எஸ் ஏ






## குடாநாட்டின் காவல் 'அரண்'கள்

கோட்டையிலிருந்து ஷெல் அடி! இருவர் மரணம்;10 பேர் காயம்.
படகிலிருந்து பீரங்கி; விமானத்திலிருந்து குண்டு.
காரைநகரில் இருதினங்களாகத் தொடர்ந்து ஷெல் தாக்குதல்!
காவலூரர் நோக்கி மீண்டும் ஷெல் தாக்குதல்!

இவையெல்லாம் பத்திரிகைத் தலைப்புச் செய்திகள். இவற்றை இங்கு கற்பகன் குறிப்பிடுவதில் விசேடம் இல்லாமல் இருக்காது. அடிக்கடி இரவு வேளைகள் அதிர்வதும், யாழ் குடாநாட்டை நோக்கிச் ''ஷெல்'' கள் அடிக்கப்பட்டு வருவதும் வாசகர்கள் அறிந்ததே. இப்படி அடிக்கடி அடிக்கப்படும் 'ஷெல்'கள், பீரங்கிக் குண்டுகளில் ஒரு சிலவே வந்து வீடுகளின் மேல் விழுந்து சேதம் ஏற்படுத்துகின்றன.

பெருமளவிலான 'ஷெல்'களையும், பீரங்கிக் குண்டுகளையும் எமது நெடிதுயர்ந்த சரும்பனை மரங்கள் தாங்கி மக்களைக் காக்கின்றன என்ற உண்மைகளை நீங்கள் எத்தனை பேர் அறிந்திருப்பீர்கள்?

''குண்டு பல கொண்டு பலம் கூட்டிக் கூரார்
கோலேந்திக் குளிர்பச்சைக் குடையும் மேவ
மண்டிடரில் மாவளமார் ஆட்சி மன்ன
வானத்தோன் காதலினுல் மாட்சிபெற்ருய்!''

—என்று அரியாலையூர்க் கவிஞர் வே.ஐயாத்துரை அவர்கள் 1975ம் ஆண்டிலேயே தீர்க்கதரிசனம் போல் சொல்லி விட்டார். 'கருணை மழை கனியுமருட் காவற் கண்ணுர்'' ஆகிய பனை இன்று எம் உயிர் காக்கும் காவல் அரண்களாக அன்ரோ விளங்குகின்றன.

குடாநாட்டில் உள்ள ஆயிரக்கணக்கான பனை மரங்கள் இன்று வீரத் 'தழும்பு'களைத் தாங்கி நிற்கின்றன. இப்பனைகள் இல்லாது விட்டால் இக்குண்டுகளைத் தாங்கி நிற்க எம்மால் முடியுமா? உயிர் குடிக்கும் எமனுக, தீப்பிளம்புடன் பாய்ந்து சீறிவரும் 'ஷெல்'களைப் பெருந்தன்மையுடன் 'கவசம்' போல் தடுத்துத் தானே ஏற்று நிற்கும் பனை மரங்களை வெட்டுபவர்களை வெட்டாமல் பார்த்துக் கொண்டு நிற்பவர்களையும் வெட்டி வீழ்த்த வேண்டும் என்று நினைக்கத்தோன்று கின்றது அல்லவா?

# ஈழத்தில் இருந்து தமிழகம் வரை.... -5-

கடந்த இதழில் என்னைக் கவர்ந்த ஒருவரின் பெயரைக் குறிப்பிடுவதாகக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அவர் வேறு யாருமல்ல ஸ்ரீ. என். நாராயணன் தான் என்னைக் கவர்ந்த அந்த முக்கிய நபர். இவர் மதுரை மாவட்ட காதிகிராமக் கைதொழில் வாரியத்தின் உதவிப்பணிப்பாளர். வர்த்தகப் பட்டதாரியுமாவார். அவரது சேவை மனப்பான்மையும் அவர் தனது கடமையில் கொண்டுள்ள ஆர்வமும் விசுவாசமும் என்னைப் பிரமிக்க வைத்தன. மதுரையில் எனக்கு அளிக்கப்பட்ட அமோக வரவேற்பின் பின்னர் நேராகப் பிரசித்திபெற்ற காந்தி நினைவு மியூசியத்திற்கு (நூதனசாலை) அழைத்துச் சென்றனர். அங்கு தங்குவதற்கு எனக்கு வசதிகள் செய்து தரப்பட்டன. இக்காந்தி நினைவு மியூசியம் ஒரு ஆச்சிரமம் போன்று புனிதமாகப் பேணப்பட்டு வருகிறது. அங்கே மகாத்மாகாந்தியை-- அவரது இலட்சிய வாழ்க்கையை, அவரது போதனைகளை நினைவுறுத்தும் வகையில் கதர் கைத்தறிப் புடவை வகைகளும் குடிசைக் கைத்தொழில்களும் அங்கே பல்வேறு வழிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கைத்தொழிற்துறைகளை அங்குள்ளோர் புனிதமான பணியாகக் கருதிச் செயற்பட்டு வருவது மகாத்மாவில் அவர்கள் கொண்டுள்ள விசுவாசத்தையும், நம்பிக்கையையும் பிரதிபலிப்பதாக உள்ளது.

இக்காந்தி நினைவு மியூசியத்தில் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறுகள். மகாத்மாகாந்தி சுதந்திரப்போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றதை- அகிம்சைப் போராட்டங்களை நினைவுபடுத்தும் படங்கள் புகைப்படங்கள், சித்திரங்கள் சம்பவங்களையும், தியாகிகளையும் தியாக வரலாறுகளையும் சித்தரிக்கும் விவரணச் சித்திரங்கள் இவை யாவும் நேரில் காண்பது போன்ற உணர்வை என்னுள் ஏற்படுத்தின. மகாத்மாகாந்தி சுடப்பட்டபோது அவர் அணிந்திருந்த இரத்தக் கறை படிந்த துண்டின் ஒரு பகுதி அங்கு பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. மகாத்மா என்று உலகத்தோரால் போற்றிப்புகழப்படும் காந்தியைக் கொல்ல கோட்சே இருந்தான்.

---

க நடராசா தலைவர், பனை அபிவிருத்திச் சபை

---



நம் மத்தியிலும் இப்படி நன்றி மறந்த எத்தனை பேரைக் காணுகின்றோம்? முதுகில் குத்துபவர் கோட்சேயிலும் கொடியவர்கள்.

உண்மையில்........ மகாத்மா காந்தி வாழ்ந்த காலத்தில்– சுதந்திரப் போராட்டக் காலத்தில் வாழ்ந்தது போன்ற ஒரு உணர்வு இக் காந்தி நினைவு மண்டபத்தில் நின்ற போது எனக்கு ஏற்பட்டது.

இதற்கிடையில் மதுரை மாநகரின் மத்தியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மீனாட்சி அம்மனைத் தரிசித்ததைச் சொல்லாமல் விட்டு விட்டேனே! மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் எனக்காக விசேட பூஜை ஒன்றையும் ஒழுங்கு செய்து இருந்தனர். ஒரு புறம் கோயிலை அண்மித்ததும் பிரமித்துப் போனேன். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுடன் பின்னிப் பிணைந்த வரலாற்றினைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கிறேன். உலகிலுள்ள எந்தக் கோவிலிலும் இத்தகைய சிற்ப அமைப்புகள் கருங்கல்லில் அமைந்திருக்கவில்லை என்று கேள்விப் பட்டிருந்தேன். ஆலயத்தில் நேரில் தரிசித்த போது இச்சிற்பவேலைப்பாடுகளின் அற்புதம் கண்டு அசந்து போய் விட்டேன்.

காலை நேரமானதால் பக்தர்கள் கூட்டம் தமது ஆராதனைகளையும் நேர்த்திக் கடன்களையும் பல்வேறு விதங்களிலும் நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். ஆலவாய் என்னும் மதுரைக் கோவிலில் துன்பங்கள் கெடுத்து வரந்தரும் தெய்வமாய் விளங்கும் மீனாட்சி அம்மையின் மீது முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பிள்ளைத் தமிழ் பாடினார் குமரகுருபர முனிவர். தமிழ் மொழியிலே உள்ள பிள்ளைத் தமிழ் நூல்களுக்கெல்லாம் அதுவே தலைசிறந்ததெனக் கருதப்படுகிறது.

"தொடுக்கும் கடவுட்
பழம் பாடல்
தொடையின் பயனே!
நறை பழுத்த
துறைத்தீந் தமிழி
னொழுகு நறுஞ்சுவையே!"

-என்று மீனாட்சி அம்மையைத் 'தமிழ் வடிவாகவே கண்ட முனிவர்

"தமிழொடு பிறந்து பழ
மதுரையில் வளர்ந்த கொடி
சப்பாணி கொட்டியருளே,"

என்று பாடியுள்ளார்.

இத்தகைய புராதனப் புகழ் வாய்ந்த மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மையைத்தரிசிக்கும் வாய்ப்புர் வாழ்க்கையில் கிடைத்தது எனக்கு உவகையை ஏற்படுத்தியது. என்னுடன் வந்த குழுவினர் ஆலயப் பிரதம குருக்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தனர். இலங்கையிலிருந்து வந்த ஒரு வாரியத்தின் (சபை) தலைவர் என்பதை அறிந்ததும் அவர் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார். ஸ்ரீ மீனாட்சி அம்மையின் ஜொலிக்கும் அருள் உருவை மிக அண்மையில் நின்று கண்ணாரக் கண்டு தரிசிக்கும் போது எனது தேகம் பரவசத்தில் ஆழ்ந்தது. உடல் எங்கும் புதியதோர் சக்தி பிறப்பது போன்ற உணர்வு–மெய் சிலிர்த்தது. இத்தகைய நேரில்

தரிசிக்கும் வாய்ப்பு சாதாரணமாக எல்லோருக்கும் கிடைப்பது இல்லை. இந்தப் பாக்கியம் தமிழ் நாட்டில் கிடைத்தது பெரும் பேறே.

மதுரை மாவட்டத்தில் எனது விஜயத்தைப் பற்றிக் கூறப் புகுமுன் முத்தும் முத்தமிழும் வளர்த்த மதுரை மாநகரின் பழம் பெரும் சிறப்புக்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளுவோமா? மதுரை மாநகரிலேயே தமிழ்ச் சங்கம் நிறுவி முத்தமிழை முறையாகப் பேணி வளர்த்தனர். பாண்டி நாட்டின் தலைநகரமாகிய மதுரை தொன்று தொட்டு வைகை ஆற்றின் கரையிலே அமைந்துள்ளது. தமிழார்வம் படைத்த மன்னர்கள் அரசு வீற்றிருந்த மதுரையிலே தமிழ் மணம் கமழ்ந்து கொண்டே இருந்தது. காவியங்களும் கவிதைகளும் தமிழ்ச் சங்கத்தில் குவிந்த வண்ணமாக இருந்தன.

கண்ணகியின் சீற்றத்தால் மன்னனும் மதுரையும் அழியக்கண்டு மன அதிர்ச்சியுற்ற சாத்தனார் இளங்கோ அடிகளைக் கண்டு மதுரை மாநகரிலே தாம் கண்ட துன்பக் காட்சியை எடுத்துரைத்தார் என்றும், அந்நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இளங்கோ அடிகள் சிலப்பதிகாரம் படைத்தார் என்று காவியம் கூறுகின்றது. மதுரைச் சாத்தனாரே "மணிமேகலை" என்னும் சிறந்த காவியம் படைத்தவர்.

இசைப் பாட்டிலும் புகழ் பெற்ற வைகை ஆற்றின் கரையிலே நிகழ்ந்த திருவிளையாடல்களில் ஆலவாய்ப்பெருமானாகிய ஈசன் பிட்டுக்கு மண்சுமந்து அடி வாங்கிய திருவிளையாடல் இன்றும் மதுரைமாநகரில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. தமிழ் இலக்கியத்தோடு வைகையாற்றின் பெருமை இணைந்திருப்பதினாலேயே பாரதியாரும்-

"காவிரி தென் பெண்ணை பாலாறு - தமிழ் கண்டதோர் வையை பொருனை நதி"-என்று பாடினார். பாண்டி நாட்டுத் தமிழ்ப் பெருமையைப் பாடப் புகுந்த கவிஞர் ஒருவர்-

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை" என்று போற்றியுள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேறிய நூல்கள் சாலச் சிறந்த நூல்கள் என்று தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. உலகப் புலவர் திருவள்ளுவரும் தமது திருக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கத்திலேயே அரங்கேற்றினார். இத்துணை சிறப்பு வாய்ந்த மதுரையிலே சங்கம் வளர்த்த தமிழ் பனையாலும் வளர்ந்தது என்றால் நம்புவீர்களா?

(தொடரும்)

---




❋ எம். கந்தையா, பருத்தித்துறை

கே: பல லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட திக்கம் பனஞ்சாராய வடிசாலையில் உற்பத்தி பற்றிப் பெருங் "குடி" மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனரே?

ப: நன்றி கந்தையா! ஆனால் திக்கம் வடிசாலையைப் பாதுகாக்க வேண்டிய [redacted] ஒருவர் தமது வழமையான "அழிப்பு"த் தொழிலை இங்கு செய்ய முயற்சிக்கிறார் போலத் தெரிகிறது. ஆனால் 'வேங்கை'ப் பாய்ச்சலில் உற்பத்திகள் இங்கு மீண்டும் தொடங்கியுள்ளன. எதிர்காலத்தில் இவ்வடிசாலை தமிழ்ப் பிரதேசத்தின் ஒரு பொருளாதார கேந்திரமாக விளங்கப்போகின்றது.

❋ ❋ ❋

❋ க. பூபாலசிங்கம், கோப்பாய்

கே: தமிழ் இலக்கியத்தில் 'சங்க' காலம் போன்று இப்பொழுது யாழ் மாவட்டத்திலும் 'சங்க' காலம் உருவாகியுள்ளதாமே?

ப: சரியான கேள்வி. முன்னர் தமிழ் அரசர்கள் தமிழ்ச்சங்கத்தை உயிரினும் மேலாகப் போற்றி முத்தமிழை வளர்த்தனர். ஆனால் இப்பொழுது தமிழ்த் தொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் எமது தெங்குப் பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களை [redacted]தி[redacted]ரியிடமிருந்து காப்பாற்றிக் கொள்வதே பெரிய பாடாகி விட்டது. தமிழர் மத்தியிலுள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளைப் போக்க உதவுவது போலப் பாசாங்கு செய்து இச் 'சங்கங்களைச்' சமூக ரீதியாகவும் பிரித்து வைக்க நினைக்கும் இவர்களிடமிருந்து இச்சங்கங்களைக் காப்பாற்றியேயாக வேண்டும்.

❋ ❋ ❋

❋ த. பரமகுரு, சண்டிலிப்பாய்

கே: உங்களுக்கு எப்போது கோபம் வரும்?

ப: இப்படியான கேள்விகளைக் கேட்கும் போது......

❋ ❋ ❋

❋ மு. நல்லதம்பி, கரவெட்டி

கே: கற்பகனாரே! நீர் ஒரு தீர்க்கதரிசி என்ற நினைப்போ?

ப: உம்மை நல்ல 'தம்பி' என்று நினைத்தேன். போயும் போயும் இப்படிக் கேட்டு விட்டீரே.

(24ம் பக்கம் பார்க்க)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 12

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(1) கற்காலம் (4) கைதடி (5) சாஞ்சி (7) சமர் (10) பனையோலை

**மேலிருந்து கீழ்**

(1) கற்குகை (2) கானு (3) அன்னுசி (4) டினுர் (8) யானை (9) ஆலை (11) சாகரம்

### பரிசு பெறுவோர் விபரம்

1ம் பரிசு ரூபா 25/- வி. ஜெயரட்ணசிங்கம், வருமான மேற்பார்வையாளர், யா. அ. சபை, உடுவில் உப. அலுவலகம், சுன்னுகம்.

2ம் பரிசு ரூபா 15/- A. ஜீவரத்தினகுமார், பனைரோட் கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை

3ம் பரிசு ரூபா 10/- எவருக்கும் வழங்கப்படவில்லை.

---

(23 ம் பக்கத் தொடர்ச்சி)

❋ மேகலா நவரத்தினம், உடுப்பிட்டி
கே: மனைவி அமைவதெல்லாம்......?
ப: அவரவர் செய்த பாவ புண்ணியத்தைப் பொறுத்தது..... தங்கைச்சி.

❋ ❋ ❋


❋ சி. பரமேஸ்வரி, கொடிகாமம்
கே: ஒருவன் எப்போது கோழையாகின்றான்?
ப: மனைவி முன்னால் நிற்கும் போது.

❋ ❋ ❋

❋ எம். கந்தையா, பருத்தித்துறை
கே: தமிழ் பேசும் பெருங் 'குடி' மக்களுக்குக் 'கற்பகம்' இவ்வருடம் விசேட பரிசுகள் ஏதும் உண்டோ?
ப:- நல்ல கேள்வி கேட்டீர்கள். சகல மதுபானக் கடைகளிலும் மிகச் சிறந்த பனஞ்சாராயம் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல பெண்மணிகளின் நலன் கருதித் தாய்மார் பிரசவ காலத்தில் மருந்தாகப் பாவிப்பதற்கென (Palm Lagger) "பாம்லாகர்" என்ற பெயருடன் மிகச் சிறந்த மருத்துவரீதியிலான 'மது'பானம் ஒன்று விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 13




**இடமிருந்து வலம்:**

(1) புத்திர பாசத்தால் உயிரிழந்த ஒரு மன்னன்.

(4) அகத்தின் அழகு 'இதில்' தெரியும். ஆனால் குழம்பியுள்ளது.

(5) உடலை உருக்கும் ஒரு கொடிய நோய்.

(7) ......... செய்ய விரும்பு.

(10) இதனை மூலப்பொருளாகக் கொண்டே பனை வெல்லம், கல்லாக்காரம் ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றன.

## மேலிருந்து கீழ்:

(1) இதனைக் 'குளம்' என்றும் சொல்லுவர்.

(2) மன்மதன் துணைவி இவள்.

(3) 'இது' பலவிதம்.

(6) முற்றம் கூட்ட உதவுவது. சில வேளைகளில் அடிக்க உதவும்.

(8) மனித உடலின் ஒரு பிரதான உறுப்பு.

(9) உழவுக்குப் பயன்படும் கருவி.

(11) செஞ்சோற்றுக் கடன் தீர்த்த கொடைவள்ளல் இவன்.

## நிபந்தனைகள்

❋ விடைகள், தரப்பட்ட கூப்பன்களில் நிரப்பப்பட்டு ஆசிரியர், 'கற்பகம்' 330. கே. கே எஸ். றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

❋ பரிசு பெற்றவர் விபரம் 'கற்பகம்' இதழில் வெளியிடப்படும்.

❋ முதற் பரிசு ரூபா 25/-, 2ம் பரிசு ரூபா 15/-, 3 ம் பரிசு ரூபா 10/- பரிசுகள் யாவும் போட்டி முடிவுகள் வெளியானதும் அனுப்பி வைக்கப்படும். அரியாலை தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் இப்பரிசில்களை வழங்குகின்றனர்

❋ கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல. 13" எனக் குறிப்பிடல் வேண்டும்

❋ உங்கள் விடைகளை அடுத்த மாதம் 15 ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................






## சித்திரை 1986

16. அமெரிக்கப் போர்விமானங்கள் தாக்கியதில் லிபிய அதிபர் கடாபி குடும்பத்தினர் காயமுற்றனர்.

17. அக்மீமனை இடைத்தேர்தலில் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றிபெற்றது.

18. யாழ் நகரில் கர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.
மொரவேவா கண்ணிவெடியினால் எட்டு விமானப்படையினர் பலியானதாக அறிவிப்பு.

20. கந்தளாய்க்குளம் அணை உடைந்து 100 பேருக்குமேல் பலியாகினர். சுமார் 20,000 பேர் வீடிழந்தனர்.

21. தொண்டமானாறு செல்வச் சந்நிதி தேர் தீக்கிரையானது. மடம், கட்டிடங்களும் எரிந்தன.

23. அனுராதபுரம் பெற்ரோலிய களஞ்சியத்தில் குண்டு வெடித்து பத்துப்பேர் பலி.
வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் குண்டு வெடித்து ஒன்பது பேர் காயம்.

27. பருத்தித்துறைக் கடலில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில்13பேர் படகுடன் கருகிப்பலி.

## வைகாசி 1986

1. சூடாநாட்டில் இரு இளைஞர் இயக்கங்கள் தொடர்ந்து 3 தினங்களாக மோதல்:
தமிழீழத்தில் எமக்கே அதிக செல்வாக்கு- புலிகள்
இந்தியாவில் பெரும் ஆதரவு எமக்கே- ரெலோ

3. கிராமசேவை அலுவலர்கள் அறிக்கை சமர்ப்பித்தாலே இராணுவ முகாமில் உள்ளவர்கள் விடுதலை செய்யப்படுவர் என்று பிரிகேடியர் அறிவித்துள்ளார்.
கட்டு நாயக்காவில் எயர் லங்கா விமானம் குண்டு வெடிப்பால் தகர்ந்தது. 21 பேர்பலி: 41 பேர் காயம்.

5. பாரத அமைச்சர் திரு. சிதம்பரம் தலைமையிலான குழு ஜனாதிபதியுடன் நான்கு தடவைகள் பேச்சு வார்த்தை நடத்தியது.

6. தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரான திரு. ஸ்ரீசபாரத்தினம் கோண்டாவில் அனுங்கையில் இடம்பெற்ற இரு இயக்கங்களின் மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

7.கொழும்பு கோட்டையிலுள்ள மத்திய தந்திக் கந்தோரில் குண்டு வெடித்ததால் 12 பேர் பலி. 114 பேர் காயம். 20 பேர் அபாயகரமான நிலையில்.

8. சென்னை ரெலோ அலுவலகம் முற்றுகத் தகர்க்கப்பட்டதாம். ரெலோ தலைவர் ஸ்ரீசபாரத்தினம் கொலைக்கு அனுதாபம் தெரிவித்து பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

12. கொழும்புதிரும்பிய பாரதத் தூதுவர் டிக்ஸிற் ஜனாதிபதியுடன் இனப்பிரச்சினைபற்றித் தனியாகப் பேசினர்.

# உண்மை சுடும்

-5-

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூட லீவுநாள், நானும் செல்லத்துரையும் பள்ளிக்கூடத்து வாழைகளுக்கும். பூங்கன்றுகளுக்கும் தண்ணீர் எடுத்து ஊற்ற வேண்டிய முறை. பள்ளிக்கூடம லீவு என்றாலும் அவரவர் முறை வரும் போது வந்து இப்படித் தண்ணீர் இறைத்து அங்குள்ள தாவரங்களுக்கு ஊற்றியே தீர வேண்டு மென்பது ஹெட்மாஸ்ற்றர் யோகநாதனின் கண்டிப்பான உத்தரவு. நான் கிணற்றிலிருந்து தண்ணீரை இறைத்து வாளியை நிரப்பி விட செல்லத்துரை அதை எடுத்துச் சென்று ஊற்றிவிட்டு வருவான்.

ரீச்சரின் வீட்டின் அருகேநின்ற வாழைகளுக்குத் தண்ணீர் ஊற்றச் சென்ற செல்லத்துரை, கிடுகு அடைப்பாலான குசினி நீக்கலுக்குள்ளால் ஏதோ பூந்துபிடிச்சு வெகு நேரம்வரை சத்தம் செய்யாமல் வெகு இரகசியமாக பார்த்தவண்ணம் நிற்கின்றான் எரிச்சலூண்ட நான்,

"டேய் குருவி......" என்று அழைத்தேன்,

அவசரமாக என்னைத் திரும்பிப் பார்த்த செல்லத்துரை, தனது வலது கையால் வாயைப் பொத்தியபடி 'சத்தம் போடாதே' என்ற சைகையில் என்னை எச்சரித்து விட்டு, அவசரமாக என்னையும் அங்கே வருமாறு கையை காட்டி அழைத்தான்.

செல்லத்துரை தோற்றத்தில் என்னைக்காட்டிலும் கீழே நிற்கும் நிலமட்டவடலிக் கணக்கில் இன்னொருவனாக இருப்பினும், இதே உலக விஷய ஞானங்களில் எங்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களிலேயே ஒப்பாரும் மிக்காருமற்றவன். ரீச்சருக்கும் ஹெட்மாஸ்ற்றர் யோகநாதனுக்கும், பொன்னம்மா அக்காவுக்கும் பின்னல் பிணையல் போட்டு என்னென்னவோ எல்லாம் இணைத்துக் கதைப்பதில் முன்னணியில் நிற்பவன். ஒட்டுப் பார்ப்பதிலும் இரகசியங்களைக் காது கொடுத்துக் கேட்பதிலும், தெருக்களில் பொறிக்கிடங்கு ஏற்றிவைத்து தனக்குப் பிடிக்காதவர்களையும் தன் நண்பர்களின் எதிரிகளையும் அதில் தலைகுப்புற விழுத்திப் பழி தீர்த்துக் கொள்வதிலும் படுசூரி... எந்த வெப்புக்கதைகளையும், ஊத்தைப் பேச்சுக்களையும் கூட வெருவாக ரொகித்து பேசிப்பேசி இன்புறுவதோடு மற்றவர்களையும் சிரிக்க வைப்பதில் விண்ணன். 'பொல்லாத சுறட்டன்' என்பது தான் அவனுக்கு தட்டு மொத்தமாக ஊரில் புழங்கிவந்த பெயர். தகப்பன் செல்லையா ஏலாக்கடையில் கம்பி காய்ச்சிச் சூடுகூட வைத்துப் பார்த்துவிட்டார்.

அவனுடன் சேருவதை மற்றப் பிள்ளைகளின் பெற்றோர்கள் விரும்புவதில்லை. எங்களை யெல்லாம் எங்கள் பெற்றோர் கண்டித்தும் வைப்பார்கள். ஆனாலும் அவனை வெறுக்கும் எவரையுமே அவன் சும்மா விட்டுவைக்க மாட்டான். எந்த நேரமும் ஏதோ ஒருவகையில் சுறண்டிக் கொண்டே இருப்பான். அல்லது பொறிக்கிடங்கு ஏற்றி வைத்து விழுத்தி செய்யாத அட்டூழியங்கள் எல்லாம் செய்வான். அதனால் வீட்டில் பெற்றோருக்கு அடங்கிய பிள்ளைகளாக நாங்கள் இருந்த போதிலும், பள்ளிக்கூடம் வந்து மறுபடியும் வீடு போய்ச்சேரும்வரையும் செல்லத்துரைக்கு அடங்கினவர்களாகவே அநேகம் மாணவர்கள் இருந்தார்கள் என்று தான் சொல்ல வேண்டும். அவன் அந்த நாட்களிலேயே பருத்தித் துறையில் 'ரென்ற்' கொட்டகை அடித்துக் காட்டிய 'வசுக்கோப்பு' களை எல்லாம் திருட்டுத் தனமாகப் போய்ப் பார்த்து வருவான். தாய் தகப்பனுக்கு 'ரூஸ்' விடுவதற்காக பாயில் நீட்டுக்குத் தலையணைகளை வைத்து அதற்குப் போர்த்து மொட்டாக்குப் போட்டுவிட்டு போய் விடுவானம். அப்படி பார்த்து விட்டு வந்து அந்தப் படங்களில் வரும் காதல் காட்சிகளையும், குறிப்பாக சிந்தாமணிப் படத்தைப் பார்த்து விட்டு வந்து அவன் சொன்னவைகள் இன்றும் என்நெஞ்சில் பசுமையாய் இருக்கின்றன. அதாவது சிந்தாமணிப்படத்தில் வந்த அசுவத்தம்மா சீலையை முழங்காலுக்குமேல் சிரைத்துப் பிடிக்கும் காட்சியை அவன் வர்ணித்த விதம்... சீ. சீ. படுமோசம் அந்த நாட்களில் சிந்தாமணிப் படத்தை பார்த்த பலருக்குப் பிடித்த வைத்தியம் இவனுக்குப் பிடிக்காமல்விட்டது எனக்கென்னவோ இன்னும் ஆச்சரியம் தான்.

அடேயப்பா செல்லத்துரை அந்த நாட்களில் செய்த அட்டாதுட்டிகளையும் குறும்புச் செய்கைகளையும், குதியாட்டங்களையும் அவனுடன்படித்தஎவருமேதங்கள் சீவியத்தில் மறக்க இயலாதவைகள். அவன்தான் அந்தநாளைய காவிய புருஷன் என்றே சொல்ல வேண்டும். இன்றும் அன்றைய பள்ளிக்கூட நண்பர்கள் எங்காவது தற்செயலாகச் சந்தித்துக் கொண்

(31ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை ❋ கே. வி. என்.

# சங்கச் செய்திகள்

மே 1986

முல்லைத்தீவு!

## சங்கத்தினருக்கே இம்முறையும் குத்தகை!

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிய ஆண்டுக்கான தவறணைக் குத்தகையை துணுக்காய் தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச் சங்கமே பொறுப்பேற்றுள்ளது. கடந்த ஆண்டும் இச் சங்கமே முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தவறணைகளை குத்தகை அடிப்படையில் பெற்று ஒழுங்காக நடாத்தியதால் இம்முறை, குத்தகையை பெறுவது இலகுவானதாக தெரிவிக்கப்படுகின்றது. துணுக்காய் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம் தனது சகோதர சங்கங்களான முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இப்பணியை சிறப்பாக செய்து இம்மாவட்டத்திலுள்ள தொழிலாளர்கட்கும் கணிசமான சேவை புரிந்து வருகின்றது.

கோண்டாவில் சங்கத்தின்

## புதிய நிர்வாக சபை

கோண்டாவில் தெ. ப. பொ. உ. சபை கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 30-4-86 ல் சங்கத் தலைவர் திரு. க. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாக சபை தெரிவின்போது திரு. இ. செல்வரெட்ணம் நடப்பு ஆண்டுக்கான புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். திரு. க. திருநாவுக்கரசு உப தலைவராகவும் திரு. செ. செல்லையா செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் இயக்குனர்சபை உறுப்பினர்களின் பெயர் விபரம் பின்வருமாறு: திருவாளர்கள் பொ. செல்வரெட்ணம், சு. நல்லையா, வ. நவரெட்ணம், இரட்ணசிங்கம் பா. செல்வராசா க. செல்லர்.

## உதவி ஆணையாளர் பாராட்டு

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரினால் சங்கங்களின் பிரதிநிதிகளுக்காக மாதாந்தம் நடாத்தப்படும் மாதாந்தக் கருத்தரங்கு அண்மையில் சங்கங்களின் சமாசக் காரியாலயத்தில் நடைபெற்றது.

யாழ் குடாநாட்டின் யுத்தக் கெடுபிடிகள் - அதனால் சீர்குலைந்து போயிருக்கும் போக்குவரத்து வசதியீனங்கள் மத்தியிலும் மேற்படி மாதாந்தக் கருத்தரங்கில் பெருந்தொகையான சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தமையையிட்டு உதவி ஆணையாளர் அவர்கள் பெரி

(31ம் பக்கம் பார்க்க)



(30ம் பக்கத் தொடர்ச்சி)

தும் பாராட்டுத் தெரிவித்தார்.

அத்துடன் நெருக்கடி மிக்க இவ்வேளையிலும்— குறிப்பாக தெல்லிப்பளை போன்ற சங்கங்களின் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த தவறணைகள் இயங்க முடியாது இழுத்து மூடப்பட்டிருக்கும் இவ்வேளையிலும் அச் சங்கம் சிறப்பாக இயங்கி வருவதையிட்டும் உதவி ஆணையாளர் திரு ச. வேலாயுதம்பிள்ளை அவர்கள் பெரிதும் பாராட்டுத் தெரிவித்தார்.

சமாச பொதுமுகாமையாளர் திரு. ஆ. ந. இராசேந்திரன் உட்பட பலரும் கருத்துரை வழங்கினர்.

---

டால் முதலில் கேட்டுக் கொள்வது செல்லத் துரையைப் பற்றித்தான் என்றால் பார்க்க வேண்டியது தானே. ஒவ்வொருத்தர் நெஞ்சிலும் எப்படி செல்லத்துரை நீங்காத இடத்தை பிடித்து வைத்திருக்கின்றான் என்று,

ஒருநாள் பூமணிக்கு பின்வாங்கிலிருந்த செல்லத்துரை அவள் பின்னலைப் பிடித்து இழுத்தோ என்ன சனியன் செய்தானோ ஒரு குரங்குச் சேட்டை செய்து விட்டான்.

அது பொக்கருடைய வகுப்பு.

பூமணி சிணுங்கிக் கொண்டு எழுந்து போய், பொக்கரின் எதிரே நின்று முறைப்பாடு செய்தாள்.

''வாத்தியார், இவன் செல்லத்துரை இருக்கவிடாமல் கீச்ச மூச்சம் காட்டுகிறான் வாத்தியார்'' என்றாள்.

''எண்டா செல்லத்துரை' எழுந்து நில்'' என்றார் பொக்கர்.

கணபதிப்பிள்ளைவாத்தியாருக்கு அப்போது பற்களெல்லாம் வெகு நேர்த்தியாக ஈச்சங்கொட்டை கணக்காகத்தான் இருந்தன. ஒரு பல்லுத்தானும் அவருக்கு விழுந்திருக்கவுமில்லை. ஆடிஅலைக்கழிந்து, கொதி நோவென்று கூறிக்கொண்டதுமில்லை. அதன் பின்பு அந்த அவருடைய முன்வாய் பற்களெல்லாம் விழுந்த பின்பு— என்ன என்ன விழுந்த பின்பா?— செல்லத்துரை பொறிக்கிடங்கேற்றி வைத்து அவரை அதில் விழுத்தி அவர் முன்வாய்ப் பற்களை உடையச் செய்த அட்டூழியத்துக்குப் பின்பு தானே பொக்கர் என்ற பட்டப் பெயரே புழக்கத்துக்கு வந்தது.

''எண்டா, அவள் வயது வந்த பிள்ளையில்லையா?..... அவளோடை என்ன சேட்டையும் சரசமும் என்று கேட்கிறன்? ஆ!. வாடா கழுதை இஞ்சாலை....''

''இல்லை வாத்தியார், வந்து வந்து வாத்தியார்..''

''என்னடா வந்தும் போயும் கழுதை''

''இல்லை வாத்தியார் அவவின்ரை முதுகுச் சட்டையிலை கட்டெறும் பொண்டு ஊந்து வந்திது வாத்தியார். அதுதான் அதைத் தட்டிவிட்டனான் வாத்தியார்''

''கழுதை தேஞ்சால் கட்டெறும்பாய்த்தான்ரா வரும் வா

கழுதை இஞ்சாலை. உனக்கு, வர வரச் சேட்டையள் கூடத்தான் போச்சுது.. உனக்குக் கொஞ்ச நஞ்சமாவது செய்யிற காரியம் இன்னது செய்யக் கூடாத காரியம் இன்னதெண்டு தெரிய வேண்டாமோடா பனங்கிழங்கு' என்ற பொக்கர் செல்லத்துரையின் காதில் பிடித்துத் திருகி பின்பு அதே பிடியில் கொற இழுவையாக இழுத்துச் சென்று பள்ளிக்கூடத்து முற்றத்தில் முழங்கால்களை குத்தி இருக்கச் செய்தார். அப்போது உச்சிவானத்துச் சூரியன் கொச்சிக்காய் உறைப்பாக பற்றி எரிந்து கொண்டிருந்தான். பொக்கர் அன்று செல்லத்துரைக்கு அளித்த அந்த தண்டனை மிக கொடுமையானதும் கொடூரமானதும். முட்டுக்குத்தி முழங்கால்களில் செல்லத்துரையை இருத்திய பின்னர், அந்த உச்சிவானத்து சூரியனை இமைக்காமல் பார்த்திருக்கும் வண்ணம் பணித்தார், இதற்கு மேலும் அவன் நெற்றியில் கலவோடொன்றை வைத்து அது கீழே விழுந்தால் பத்து அடியும், தொடர்ந்து சூரியத்தண்டனையும் கிடைக்கும் என்ற பிளிறலோடு திரும்பி வந்தார் பொக்கர்.

பாவம் செல்லத்துரை. கொஞ்சமும் ஈவிரக்கமற்ற பொக்கரின் அன்றைய அந்தக் கொடிய தண்டனையை அன்று பள்ளிக்கூடம் விடும்வரைக்கும் பொக்கரின் நேரடிப் பார்வையிலேயே அனுபவித்துத் தீர்த்தான். அன்று அவனை அவன் வீட்டுக்குக் கொண்டு போய் சேர்க்கும் பொறுப்பு எங்களுடையதாகவே இருந்தது அவன் கண்கள் வெந்து வீங்கி, நிற்காமல் பெருக்கெடுத்து ஓடிவரும் கண்ணீருக்கிடையே கண்களே தெரியாமல் பரிதவித்துக் கொண்டிருந்தான். அன்று அவனைக் கைப்பிடியிலேயே வீட்டுக்குக் கொண்டு போய் சேர்க்க வேண்டி இருந்தது.

இது நடந்த அடுத்த கிழமை கணபதிப்பிள்ளை வாத்தியார் பள்ளிக்கூடம் விட்டுப்போகும் பாதை அன்று செல்லத்துரையும், ஆறுமுகமும் பள்ளிக்கூடத்திற்கு கள்ளம் போட்டிருந்தார்கள்.

ஆறுமுகம்தான் செல்லத்துரையின் அந்தரங்க நண்பனும்வலது கையுமானவன். இருவரில் யாரையேனும் ஒருவரைத்தானும் நோகக்கதைத்தோ, தாக்கியோ விட்டால் அப்படி தாக்கியவன் பாடு பரிநாசம்தான். அவனுக்குச் சித்திரவதைகள் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து உடனேயும் நடக்கும், அல்லது அதற்கு அடுத்த நாளென்றாலும் நடந்தே தீரும்.

கணபதிப்பிள்ளை வாத்தியார் வரும் தெருவிற்கு அடுத்திருந்த பெரும் வளவு ஒரே மாமரக் காடு மாமரத்தில் ஏறி இருந்த செல்லத்துரை மாங்காய்களைச் சுவைத்துக் கொண்டு அந்தக் கெவர்க் கிளையில் அட்டணக் கால் போட்டுப் படுத்திருக்கிறான். வழிமேல் விழி வைத்து பொறிக் கிடங்கின் அருகே நிற்கும் ஆறுமுகமும் மாங்காயைச் சப்பிய வண்ணம் நிற்கிறான்.

(தொடரும்)

## தயாராயிரு!
## BE PREPARED!




ஆம்!
உங்கள் பனம்
உற்பத்திகளை
சந்தைப்படுத்த
உங்கள்
உற்பத்திகளுக்குத்
தேவையான
இலவச
ஊக்குவிப்பு
உதவிகளை
வழங்க
ஒரு
சாரணனைப்போல்
என்றும்
சேவை நோக்குடன்
தயாராயிருக்கிறது
பனை
அபிவிருத்திச்
சபை
தேசிய
வீடமைப்பு
செயலகம்
யாழ்ப்பாணம்
தொலைபேசி
23801
22094

Swarnam PublicitieS